முற்பகல் 11–55

இச்சிறப்புப் பணிக் குழு, அவ்வப்போது சந்தித்து அரசு வழங்கும் உத்தரவுகளை சரியான முறையில் அமல்படுத்துவதை தீவிரமாகக் கண்காணித்து, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினை தமிழ்நாட்டில் முழுமையாகத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளை எடுக்கவும், உரிய அறிவுரைகளை வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

(இ) கவன ஈர்ப்புத் தீர்மானங்களை அவையில் எடுத்துக்கொள்வது குறித்து–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) அதுதான். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்து, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து பேசியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, சட்டமன்றம் இப்போது கூடி 4, 5 நாட்கள்தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னர், இப்போதுதான் உறுப்பினர்கள் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உடனடியாக, துறையினுடைய பதிலைப் பெறுவதற்காக மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலாளர்களுக்கும் முறையாக அனுப்பி வைக்கப்படுகின்றன. பதில் வர, வர ஒவ்வொன்றாக அவற்றை எடுத்துக்கொள்வதற்கு எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. அதேநேரத்திலே, பிரச்சினைகளினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, ‘Zero Hour’–லேயே நான் உங்களுக்கு சில நேரங்களில் அனுமதி கொடுத்து, மாண்புமிகு அமைச்சர்களை பதில் சொல்ல வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர்களிடத்திலிருந்து, செயலாளர்களிடத்திலிருந்து கவன ஈர்ப்பிற்கான பதிலை விரைவாகப் பெற்று, பதில் வர வர கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொள்கிறேன் என்பதை உங்களுக்கு என்னுடைய பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நாங்கள் உணர்வோம். நீங்கள் Department–க்கு அதை அனுப்பினாலும், அவர்கள் உடனடியாக அதற்கு பதில் அனுப்புவதில்லை. So, you are entitled with a right, to send a summon

[திரு. துரைமுருகன்] [2020 மார்ச் 17

to all the Secretaries of the Departments. Summon செய்யுங்கள். 3 நாட்களில் பதில் வரவேண்டுமென்று சொல்லுங்கள். வானளாவிய அதிகாரம் உங்களுக்கு உண்டு. (குறுக்கீடு) ஆனால், ஒன்று, I am very thankful to our Chief Secretary. சபாநாயகர் இருக்கையில் தலைமை மாற்றம் போன்று, இவர்கள் இருக்கையில் 2, 3 Secretary மாறி மாறி தினமும் வந்து உட்காருகிறார்கள். இப்போது வந்திருக்கிறார். அவரிடம் சொல்லும்போது, he can send a summon to all the Departments. அவரிடம் சொன்னால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நிறைய கேள்விகளுக்கு, நம்முடைய உறுப்பினர்கள் கவன ஈர்ப்பு என்று சொன்னால், அவையினுடைய கவனத்தை ஈர்க்கின்றவகையிலே, கேட்கின்ற கேள்விகளுக்கு உடனடியாக பதிலைப் பெற்றுத் தருவதிலே நான் முனைப்பாக இருக்கிறேன். சில நேரங்களில், நம்முடைய உறுப்பினர்களும் வினாவாகக் கேட்க வேண்டியவற்றை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுக்கிறார்கள். கொடுத்துவிட்டு, நான் கொடுத்தது என்னவாயிற்று என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை வினாவாக மாற்றுவதற்கும் உத்தரவிட்டிருக்கிறேன். அதை வினாவாகக் கொடுத்தால், வினாவாகவாவது எடுத்துக்கொள்ளலாம். அதுவும் செய்வதில்லை. ஆகவே, கவன ஈர்ப்புக்கான பதிலைப் பெற்று, உடனடியாக ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வதற்கு நான் முயற்சிக்கிறேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குக்கூட ஒரு கவன ஈர்ப்பை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், அவசர முக்கியத்துவம் கருதி, கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதால் இப்போது அனுமதிக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

(ஈ) தென்னை மரத்தில் 'வெள்ளை ஈ'யின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் அரசை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற விவசாயிகளின் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழகத்திலே நெல் விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெரும்பான்மையாக செய்யப்படுகின்ற தென்னை விவசாயத்திற்கு